**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

முன்னிலை: **திரு.பா.சரவணன், பி.எஸ்.சி., பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**இடைநிலை மனு எண்.4/202ல்**

**அசல் வழக்கு எண்.272/2022**

1. வீரமலை(இறந்துவிட்டார்)
2. தங்கம்மாள்,
   க/பெ சுப்பிரமணி.
3. சங்கர்,
   த/பெ லேட் வீரமலை ... 2,3 வரையிலான வாதிகளாக /புதிதாக சேர்க்கப்பட வேண்டிய நபர்கள் /மனுதாரர்கள்

/எதிர் /

1. K. சந்தனம் மற்றும் 8 நபர்கள் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு, கடந்த 04.11.2025 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு K.லாரன்ஸ் அவர்களும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. சையது தாஜுதீன் மதானி அவர்கள், முன்னிலையாகியும், 5ம் எதிர்மனுதாரர் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், 6 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு A. ஆனந்தன் அவர்கள் ஆஜராகியும், மனு, 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசலீனை செய்தும்,

இரு தரப்பு வாதவுரைகளைக் கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

## உத்தரவு

1) மனுதாரர்கள் தரப்பில் பிரிவு 5 வரம்புச் சட்டம் மற்றும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ், இந்த வழக்கில் இறந்துபோன வாதியின், சட்டப்பூர்வ வாரிசுகளை உரிய காலத்தில் சேர்க்காததால் ஏற்பட்ட, வழக்கழிவை ரத்து செய்ய (Set aside the abatement) மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 52 நாட்கள் காலதாமதத்தினை மன்னிக்கக் கோரி, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரர்கள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர், மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளையே விவரித்துக் கூறி, அசல் வழக்கின் வாதியான வீரமலை கடந்த 27.07.2023 அன்று உடல்நிலை சுகமின்மையினால் இறந்து விட்டதாகவும், அதன்பேரில் அவரது வாரிசுகளை வழக்கில் ஒரு தரப்பினராக உரிய காலத்தில் சேர்க்க மனு தாக்கல் செய்யாத காரணத்தினால் மேற்படி வழக்கானது 27.07.2023 அன்று அற்றுப்போய்விட்டது (Abatement) ஆகிவிட்டது என்றும், மேற்படி செயலானது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே, அசல் வழக்கினை நீக்கறவு செய்ய மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 52 நாட்கள் கால தாமதத்தினை மன்னித்து வழக்கினை கோப்பிற்கு எடுக்கக் கோரியும் வாதிடப்பட்டது.

3) 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/1 முதுல் 4 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிருரையில் கூறியுள்ள சங்கதிகளையே விவரித்து கூறி, வாதிகளில் ஒருவரான ஒரு ஆண் நபர் மனுதாரராக சேர்க்கப்பட்டிருந்தும், அசல் வழக்கின் வாதியின் மரணம் குறித்து தெரிவிக்கவும், வாரிசுகளை சேர்க்கவும் உரிய காலத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், இறந்த வாதி வீரமலையின் பொது அதிகார முகவர், வாதி இறந்த விவரத்தை விசாரித்திருக்க வேண்டுமென்றும், வாதி 27.07.2023 அன்று இறந்தபிறகு 14.02.2024 அன்று Abatement set aside–க்காக மனு தாக்கல் செய்யப்பட்டு வழக்காவணங்களின் நகல்கள் வழங்கப்பட்டதாகவும், மனுவானது சரியான குறிப்பு இல்லாமல் ஒழுங்கற்ற முறையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுவை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததற்கு எந்தவித காரணத்தையும் மனுதாரர்கள் தரப்பில் கூறப்படவில்லை என்றும், எனவே, இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

4) இந்த மனுவில் பரிசீலிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இருதரப்பு கருத்துகளும், வழக்காவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. இந்த வழக்கானது மனுதாரர்கள்/கூடுதல் வாதிகள் தரப்பில் அசல் வழக்கின் வாதி வீரமலை கடந்த 27.07.2023 அன்று உடல்நிலை சுகமின்மையினால் இறந்து விட்டதாகவும், அதன்பேரில் அவரது வாரிசுகளை

வழக்கில் ஒரு தரப்பினராக உரிய காலத்தில் சேர்க்க மனு தாக்கல் செய்யாத காரணத்தினால் மேற்படி வழக்கானது 27.0.2023 அன்று அற்றுப்போய்விட்டது (Abatement) ஆகிவிட்டது என்றும், எனவே, அசல் வழக்கினை நீக்கறவு செய்ய மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 52 நாள் கால தாமதத்தினை மன்னித்து வழக்கினை கோப்பிற்கு எடுக்கக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கில் இறந்துபோன வாதியின் வாரிசுகளை சேர்ப்பதில் ஏற்பட்ட, வழக்கழிவை ரத்து செய்ய இம்மனுவை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட, 52 நாட்கள் காலதாமதம் என்பது ஏற்கக் கூடியதாகவே உள்ளது. மேலும், மனுவை அனுமதிக்காவிட்டால், இறந்துபோன வாதியின் வாரிசுகளான, மனுதாரர்கள்/கூடுதல் வாதிகளுக்கு, ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும். இம்மனுவை அனுமதிப்பதனால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. எனவே நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிப்பதே, நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**7) முடிவாக,**

இந்த மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

B.SARAVANAN Digitally signed by B.SARAVANAN Date: 2025.11.18 13:40:30 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**

மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை.

B.SARAVANAN Digitally signed by B.SARAVANAN Date: 2025.11.18 13:40:35 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**